
Aum Sri Sai Ram

# Gems From Bhagawan Sri Sathya Sai Baba's Discourses

## பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின்


# அருள் மொழி மணிகள்



சாயி அவதாரத்தின் 78 ஆவது பிறந்ததின வெளியீடு

Published on the 78th Year of the Advent of the Sai Avathar

23-11-2003



*Aum Sai Ram*

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின்

# அருள்மொழி மணிகள்

சாயி அவதாரத்தின்
78வது
பிறந்ததின வெளியீடு

**23.11.2003**

SAI ILLAM
*of*
Thavady, Kokuvil
Sri Lanka.

1. There is only 1
- Caste - Caste of Humanity
- Religion - Religion of love
- Language - Language of the heart
- God - He is omni present

ஒன்றே
- குலம் - அது மனித குலம்
- சமயம் - அது அன்பு எனும் சமயம்
- பாஷை - அது இருதய பாஷை
- கடவுள் - எங்கும் நிறைந்தவை

2. You are the embodiment of God. Fill your self with the thought, your almightiness, your majesty your glory.
நீ கடவுளின் ஸ்வரூபமே அந்த எல்லாம் வல்ல தகைமை, மகிமை, புகழ் இவற்றின் நினைவால் உன்னை நிரப்பிடுக.

3. A heart full of compassion is the Temple of God
கருணை நிறைந்த இருதயம் கடவுளின் ஆலயம்

4. In the depth of silence only you can hear the voice of God
அமைதியின் ஆழத்தில் மாத்திரமே கடவுளின் குரலைக் கேட்க முடியும்.

5. Death is sweeter than the shackle of ignorance.
அஞ்ஞானம் என்னும் அடிமை விலங்கிலும் மரணம் கூட இனியது.

6. The heart of man is the Temple of God. Do not ruin it with the thought of I & mine.

மனிதனின் இருதயம் கடவுளின் ஆலயம். அதை 'நான்' 'எனது' என்னும் எண்ணங் களால் பொசுக்காதே.

7. Duty without love - Deplorable
அன்பில் லாக் கடமை - இழிவானது
Duty with love - Appreciable
அன்புடன் கடமை - விரும்பத்தக்கது
Love without Duty - Divine
கடமையில் லா அன்பு - தெய்வீகமானது

8. If you shed one drop of tear. I will wipe off one hundred drops of tears.
நீ ஒருதுளி கண்ணீர் உதிர்த்தால் நான் உன் கண்களிலிருந்து நூறு துளிகளைத் துடைப் பேன்.

9. Do Namasmarana. It will pulverize mountains of sins
நாமஸ்மரணை செய்யுங்கள், நாமம் மலை போல் பாவத்தையும் இடிபோல் துகளாக் கும்.

10. If you take one step towards me, I will take one hundred steps towards you
என்னை நோக்கி ஒரு அடி வை. நான் உன்னை நோக்கி நூறு அடி வருவேன்.

11. Love all. எல் லோருக்கும் - அன்பு செய்
Serve all எல் லோருக்கும் - சேவைசெய்

12. The way of Joy is not in doing what you like but liking what you are expected to do.
இன்பத்தைப் பெறும் வழி விரும்பியதைச் செய்வதிலன்று, செய்ய வேண்டியதை விரும்புவதிலேயே.

13. End of knowledge is love
அறிவின் அந்தம் - அன்பு
End of Culture is perfection
கலாச்சாரத்தின் அந்தம் - நிறைவு
End of wisdom is liberation
ஞானத்தின் அந்தம் - விடுதலை
End of Education is Character
கல்வியின் அந்தம் - ஒழுக்கம்

14. Watch your { Word / Action / Thought / Character / Heart }

உன்னுடைய { சொற்களை / செயல்களை / எண்ணங்களை / ஒழுக்கத்தை / இருதயத்தை } விழிப்புடன் கவனி

15. { See / Do / Be } Good - That is the way to God

{ நல்லதைக் காண் / நல்லதைச் செய் / நல்லவனாயிரு } நீ இறைவனை அடைவாய்

16. Money Comes and Goes
Morality Comes and Grows

பணம் வந்து போகும்
நல்லொழுக்கம் வந்து வளரும்

17. Waste of time is waste of life
காலத்தின் விரயம் வாழ்வின் நாசம்

18. Pleasure is an interval between two pains
இன்பம் என்பது இரு துன்பத்தின் இடைவெளியே.

19. You can make a stone as God. But do not make God as stone.
கல்லைக்கடவுளாக்கு. கடவுளைக்கல்லாக்காதே

20. Service to man is service to God
மானிடர் சேவையே மாதவன் சேவை.

21. Past cannot be recalled. Future is not certain. Therefore engage in holistic thought word and deed in the present.
சென்றது ஒருபோதும் வராது. வருங்காலம் நிச்சயமில்லை. அதலால், இன்றே, பவித்திரமான எண்ணம், சொல், செயல்களில் ஈடுபடு.

22. You are not one but three
First - what you think about your self.
Second - what the others think about you
Third - what you really are.
நீ ஒருவனல்ல, மூவராயிருக்கிறாய்
ஒன்று - பிறர் உன்னைப்பற்றி நினைப்பது,

மற்றது - நீ உன்னைப்பற்றி எண்ணியிருப்பது
மூன்றாவது - நீ உண்மையில் யாரென்பது.

23. Love is my form
Truth is my Breath
Bliss is my food
My life is my message
அன்பு - என் உருவம்
சத்யம் - என் மூச்சு
ஆனந்தம் - என் உணவு
என் வாழ்க்கை - நான் உங்களுக்குத் தரும் செய்தி.

24. Why fear when I am here (near)
நான் இருக்கப் பயம் ஏன்?

25. God is love. Live in love.
அன்பே கடவுள். அன்பில் வாழ்.

26. Start the day with love
Spend the day with love
Fill the day with love
End the day with love

ஒவ்வொரு நாளையும் {
அன்புடன் தொடங்கு
அன்பில் செலவிடு
அன்பால் நிரப்பு
அன்பில் பூர்த்தி செய்

27. Love is a flower. Desire is the thorn. There is no rose without thorn. Pluck the flower. Do not touch the thorn

அன்பு ஒரு மலர்: காமம் முள்ளு: முள்ளில்லாத ரோஜா இல்லை. மலரைப் பறி. முள்ளைத் தொடாதே.

28. Love is giving and forgiving. Self is getting and forgetting
அன்பு வளர்வது - கொடுப்பதிலும், மன்னிப் பதிலும்.
தன்னலம் வளர்வது - பெறுவதிலும் அதை மறப் பதிலும்

29.

Love { as thought is truth
as action is righteousness
as feeling is peace
as understanding is ahimsa

அன்பு { எண்ண வடிவில் - சத்யம்
செயல் வடிவில் - தர்மம்
உணர்வு வடிவில் - சாந்தி
புரிந்துகொள்ளும் பாங்காக
- அஹிம்சை

30. Consider love as the breath of life
பிரேமையே வாழ்வின் மூச்சு என்று கொள்

31. Out of all forms of love man's love towards God has to take the first place.
எல்லாவிதப் பிரேமைகளிலும், மனிதன் இறைவனிடம் பிரேமை கொள்வதே முதல் முயற்சியாக வேண்டும்.

32. Those seeking atmananda should avoid pleasures from the senses.
ஆத்மானந்தத்தை நாடுபவர் புலன்வழி இன்பங்களைத் தேடலாகாது.

33. Believe, there is nothing higher sweeter changeless than the truth.
நம்புங்கள் - சத்தியத்தைவிட மேலானது, உயர்ந்தது, இனிமையானது, மாறாதது எதுவும் கிடையாது.

34. Truth is the God that protect, us. There is no higher protector than the truth.
சத்தியமே நம்மைப் பாதுகாக்கும் கடவுள். சத்தியத்தைவிட மேலான பாதுகாவலன் எங்கும் கிடையாது.

35. Have undiminished love towards all beings and also have the sprit of sacrifice.
எல்லா உயிர்களிடத்தும் குறையாத அன்பும், அத்துடன் தியாகமும் உள்ளவனாயிரு.

36. Be aware of the four sins that can be committed with a tongue.

1. Speaking untruth.
2. Finding faults in others.
3. Back biting
4. Excess talk

நாவினால் உண்டாகும் நான்கு பாபங்களைப் பற்றி விழிப்பாயிரு. பொய்பேசல், பிறர் குற்றம் பேசல், புறங்கூறுதல், அதிகம் பேசுதல்.

37. Do not envy the success of others. Do not engage in harmful thoughts towards others you rejoice at the happiness of others.
பிறருடைய சிறப்பைக்கண்டு பொறுக்காத தன்மையும், அவர்களுக்குத் தீங்கு விரும்புவதையும் முதலில் விடு. பிறர் சந்தோஷத்தைக்கண்டு நீ சந்தோஷப்படு.

38. Patience confers necessary strength to man
பொறுமையே மனிதனுக்கு வேண்டிய பலத்தைத் தருகிறது.

39. Whoever wishes to be happy should always do good to others
தான் சுகமாயிருக்க விரும்புபவன் எப்பொழுதும் நல்லதையே செய்துகொண்டிருக்க வேண்டும்.

40.

Conquer {
- anger by love
- affection by inquiry
- untruth by truth
- evil thought by good thought
- avarice by giving

கோபத்தை அன்பினாலும், பாசத்தை விசாரத்தாலும், பொய்மை மெய்யாலும், தீய எண்ணங்களை நல்லெண்ணங்களாலும், பேராசையை ஈகையாலும் சுலபமாக வெல்லலாம்.

41. Whatever Good or evil one does will endlessly pursue him

நல்லதையோ தீயதையோ எதை ஒருவன் செய்தாலும் அதன் விளைவுகள் நிற்காது அவனைத் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

42. Excessive desire will cause only sorrow. Contentment is best. There is no higher joy than contentment.

பேராசை துன்பத்தையே விளைவிக்கும். திருப்தியே சிறந்தது. திருப்தியிலும் மேலான சந்தோஷம் இல்லை.

43. What you do not like others to do to you do not your self do that to others.

எதை உனக்கு மற்றவர்கள் செய்யக்கூடாது என்று எண்ணுகிறாயோ அதைப் பிறருக்குச் செய்வதைத் தவிர்.

44. Treat praise and blame equally

புகழ்ச்சியில் எழுதலும், இகழ்ச்சியில் விழுதலும் வேண்டா.

45. God the embodiment of truth gives dharshan to those who have truth in there tongue and love in their heart.

சத்ய ஸ்வரூபமான இறைவன் வாக்கில் உண்மையும், இருதயத்தில் அன்பும் உள்ளவர்க்கே தரிசனம் கொடுக்கிறார்.

46.Do not listen to the dictates of the mind. Mind is another word for desire. Mind nurtures desire. World is the creation of the desires of the mind

மனத்திற்குச் செவி கொடுக்காதே, தேவை என்பதற்கு வேறொரு சொல்லே மனம். மனம் தேவைகளை வளர்க்கும். அது தேவையினாலேயே இந்த உலகமாகப் பரிணமித்தது.

47.A person is born, to learn how not to be born again.

மீண்டும் பிறவாமல் இருப்பது எப்படி என்று தெரிந்து கொள்ளவே ஒருவன் பிறக்கிறான்.

48.You are the body, mind, jiva is a dream. In reality you are sath - chith-ananda. You are the creator and the destroyer of the universe.

நீ உடல், மனம், ஜீவன் என்பது கனவே. நீ உண்மையில் சத்-சித்-ஆனந்தமே. நீயே இப் பிரபஞ்சத்தைப் படைப்பதும், ஒடுக்குவதும்.

49.God comes and moves among people in human form so that he may listen to his words, have contact with him, love him, respect him and obey him. He has to speak our language. Move about like us and live

likes us. Otherwise he will be avoided, uncared for, feared and excluded.
கடவுள் மனித ரூபத்தில் வந்து, மக்கள் மத்தியில் நடமாடுவது, அவரது உரைகளை அவர்கள் கேட்கவும், அவரோடு தொடர்பு வைக்கவும், அன்பு பண்ணவும், மதிக்கவும், கீழ்ப்படியவுமே. அவர் மனிதரின் பாஷை யில் பேசி மனிதனைப் போல் பழகி மனிதனாக வாழவேண்டியிருக்கிறது. இன்றேல் அவர் விலக்கியோ, கைவிட்டோ, பயந்தோ, தவிர்த்தோ விடப்படுவார்.

50. I will tell you one thing. Whatever happens you are mine. I will not abandon you. Wherever you are you are close to me. Wherever you are you are within my reach.
ஒன்று உனக்குச் சொல்வேன். எப்படியிருந் தாலும் நீ என்னுடையவனே. உன்னை நான் கைவிடமாட்டேன். நீ எங்கிருந்தாலும் எனக் கண்மையில் தான் உள்ளாய், எங்கிருந்தாலும் நீ என் கைக்குள்ளேயே.

51. Loving the distant God has no meaning that love is just mere thought and word.
தூரத்தில் உள்ள கடவுளிடத்து அன்பு செய்வது என்பது அர்த்தமற்றது. அந்த அன்பு வெறும் எண்ணங்களும், சொற்களுமே.

52. Make your self a silent rose, that speak only by fragrance.
உன்னை சத்தமில்லாமல் 'வாசனை' என்னும் பாஷையில் பேசும் ரோஜாவாக்கு.

53. The worth of a man is measured by his sense control.
ஒருவனுடைய பக்குவம், புலனடக்கம் என்னும் அளவுகோலாலே அளக்கப்படும்.

54. When the animal instincts are washed away Divine feelings will overflow.
மிருக உணர்வுகளைக் கழுவித் தள்ளினால் பதிலாய்த் தெய்வ உணர்வுகள் பொங்கி வழியும்.

55. Humanity without God is a forest full of wild animals.
கடவுளற்ற மனித சமூகம், மிருகங்கள் உள்ள காட்டிற்குச் சமம்.

56. Your nature is sath - chith - ananda. Believe that is why you are living like this. That is you want eternal life.
உங்கள் இயற்கை சத்-சித்-ஆனந்தம். நம்புங்கள். இதனால்தான் இப்படி வாழ்கிறீர் கள். அதாவது என்றும் உயிர்வாழ விரும்பு கிறீர்கள்.

57. Love others. Serve Others. Then only you can earn my grace.
பிறருக்கு அன்பு செய். சேவை செய். அப்பொழுதே நீ என் அன்பைப் பெறமுடியும்.

58. God is the true friend. Truth is the father. Love is the mother. Knowledge is the true

son, Santhi is the daughter. Bhakthas are brothers. Yogis are friends.
கடவுளே உண்மையான நண்பன். சத்தியமே தந்தை, அன்பே தாய், அறிவே புத்திரன், சாந்தியே புத்திரி, பக்தர்கள் சகோதரர்கள், யோகிகள் நண்பர்கள்.

59. Desire + Life = Man
Life - Desire = God
ஆசை + வாழ்வு = மனிதன்
வாழ்வு - ஆசை = கடவுள்

60. See everything as a reflection of God
எல்லாவற்றையும், ஒவ்வொன்றையும் ஒன்றின், அதாவது இறைவனின் பிரதி பிம்பமாகவே காணுங்கள்.

61. Unity is Divinity
Purity is wisdom
ஒருமைப்பாடு - தெய்வீகம்
பரிசுத்தம் - ஞானம்

62. I don't want your devotion. I want your Transformation
உங்களுடைய பக்தி எனக்குத் தேவை யில்லை. உங்கள் உயர்நிலை மாற்றமே எனக்கு வேண்டும்.

63. God is not interested in the worldly offerings you make. What you have to offer God is the heart that He has given to you
நீங்கள் சமர்ப்பிக்கும் உலகப் பொருட்

களைப் பற்றி கடவுள் அக்கறைப்படவி ல்லை. கடவுள் தந்த இதயத்தை தூய்மை யாகக் கடவுளிடம் சமர்ப்பிப்பதே வேண்டி யது.

64. When you respect your parents there will be rich rewards for you in future.
பெற்றோரைக் கனம் பண்ணினால், எதிர்காலத்தில் உயர் விருதுகளுக்கெல்லாம் உரியவர்கள் ஆவீர்கள்.

65. Love is the only yardstick to measure the power of Divinity. Hence we have to develop love to experience Divinity.
அன்பு மட்டுமே தெய்வீகத்தை அளவிடக் கூடிய ஒரே அளவுகோல். ஆகவே தெய்வீகத்தை அனுபவிக்க அன்பை அபிவிருத்திசெய்ய வேண்டும்.

66. You don't have to send any special invitation to me or extol me. I am with you, in you, above you, below you, around you.
பெரிய பாராட்டுக்களோ, விஷேட அழைப்பி தழோ எனக்கு அனுப்ப வேண்டியதில்லை. நான் உங்களோடு, உங்களில், உங்களுக்கு மேலாக, உங்களுக்குக் கீழாக, உங்களைச் சுற்றி இருக்கின்றேன்.

67. Divinity pervades the entire creation. Every man is a spark of Divinity. Such being the case, how can man be called a mere mortal.

முழுப்படைப்பையும் தெய்வீகம் ஊடுருவி இருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தெய்வீகத்தின் ஒரு பொறியாகும். அப்படியிருக்கும்பொழுது அவன் தன்னை அழிந்து போபவன் என்று எப்படிச் சொல்லமுடியும்.

68. You are not mere mortals. You are the spark of Divinity. You should lead your life in a betitting manner. It is only when you understand your Divine origin will your thoughts words and deeds become sacred.
அற்பமான அழிந்து போகக்கூடிய ஒன்றல்ல நீங்கள். நீங்கள் தெய்வீகத்தின் ஒரு பொறி. அதற்குத் தகுந்த மாதிரி உங்கள் வாழ்க்கை அமைந்திருக்க வேண்டும். உங்கள் தெய்வீக பாரம்பரியத்தை தெளிவாக அறிந்து கொண்ட பின்பே உங்கள் எண்ணம், சொல், செயல் தூய்மையாகும்.

69. I know that I am not the body. Hence I do not care for any sufferings of this body.
நான் இந்த உடம்பு அல்ல என்று எனக்குத் தெரியும். அதனாலேயே உடம்பின் உபாதைகளுக்கு நான் முக்கியத்துவம் தருவதில்லை.

70. In order to experience Divinity which is the very form of love, you have to become the very personification of love.
அன்பின் வடிவமான தெய்வீகத்தை

அனுபவிப்பதற்கு நீயும் அன்பின் உருவகம் ஆகவேண்டும்.

71. If you want to understand the principles of the Atma, you should not give scope to multiplicity. All that you see and hear in this world is merely reaction, reflection and resound. The reality is within you.
ஆத்ம தத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் பலவாக உள்ளது என்ற எண்ணத்தை அகற்ற வேண்டும். 'இந்த உலகில் நீங்கள் பார்ப்பது, கேட்பது எல்லாம் எதிர்செயல், எதிர் விளைவு, எதிரொலி. உண்மை நிலை உங்களுக் குள்ளேயே உள்ளது.

72. You should join Satsanga to know this truth. There should be unity between all that you see, hear and do. This learning is true Sathsanga.
இந்த உண்மையைத் தெரிந்து கொள்ள நீங்கள் சத்சங்கத்தில் இணைய வேண்டும். நீங்கள் பார்ப்பதில், கேட்பதில், செய்வதில் ஒற்றுமை (உள்ளது ஒன்று என்ற தத்துவம்) துலங்க வேண்டும். சத்சங்கம் என்பது இதனை அறிந்து கொள்வதுதான்.

73. The primary duty of man is to understand properly his innate Divine nature and experience his divinity.
தன்னுடைய உள்ளுறையும் தெய்வீகத்தின்

தன்மையை சரியாகப் புரிந்து கொண்டு தன்னுடைய தெய்வீகத்தை அனுபவிப்பது ஒரு மனிதனின் தலையாய கடமையாகும்.

74. Today as different people follow different paths their delusion is also increasing. This delusion is leading to more and more confusion. As a result of this confusion you lose the "fuse" that connect you with God.
இன்று வெவ்வேறு மனிதர்கள் வெவ்வேறு பாதைகளைப் பின்பற்றுவதனால் அவர் களுடைய பிரமையும் வளர்ந்து கொண்டே போகிறது. இந்தப் பிரமை மேலும் மேலும் சிக்கலுக்கு வழிவகுக்கிறது. அதன்பயனாக கடவுளுடன் உன்னை இணைக்கும் இணைப்பை நீ இழந்து விடுகிறாய்.


75. When you develop the feeling of oneness evil qualities like hatred, jealousy, etc, will not come near you. You will not be perturbed by pain and suffering that is true bliss.
ஒன்று என்ற உணர்வை வளர்க்கும் பொழுது பொறாமை, வெறுப்பு போன்ற தீய குணங்கள் உன்னிடம் அருகிலும் வராது. நீ நோவு களாலும். வருத்தங்களாலும் அலைக் கழிக்கப்படமாட்டாய். இரட்டைகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் நீ இருப்பாய். இதுதான் உண்மையான ஆனந்தம்.

76. Man is the embodiment of love, peace and bliss. Why then is he afflicted with sorrow?

It is because he flouts the divine commands. This is the reaction of going against the Divine will.
அன்பு, அமைதி, ஆனந்தம் என்ற இவற்றின் திருஉருவம்தான் மனிதன். அப்படியாயின் அவன் ஏன் துன்பத்தால் துவண்டு போகிறான். ஏனெனில் அவன் தெய்வீக ஆணைகளை ஏளனம் செய்கிறான். தெய்வீக சங்கற்பங்களுக்கு எதிராகப் போவதன் விளைவே இது.

77. You need not give anything to Sai. Lead a life of high character and good conduct. That is the only thing I want. This is the only thing which gives me joy.
சாயியிற்கு நீங்கள் எதுவும் தரவேண்டாம். உயர்ந்த ஒழுக்கமும், நன்னடத்தையும் உள்ள வாழ்க்கையை நடாத்துங்கள். அது மட்டுமே எனக்குத் தேவையானது. அந்த ஒரு விடயமே எனக்கு ஆனந்தத்தைத் தரவல்லது.

78. Not only here but wherever you go, you should promote unity, Never give room for hatred. Only then can you call your self a true devotee of Prasanthi Nilayam.
இங்கு மட்டுமல்ல நீங்கள் எங்கு போனாலும் ஒற்றுமையை (ஒருமையை) வளர்க்க வேண்டும். வெறுப்புக்கு இடம் கொடாதீர்கள். அப்பொழுது மட்டுமே உங்களை நீங்கள் பிரசாந்தி நிலையத்தின் பக்தர்கள் என்று சொல்லிக் கொள்ளலாம்.





Harikanan Printers, 424,K.K.S Road, Jaffna. T.P:021-2222717